
# மறையாசிரியர் தேர்வு

## வினாக்களும் விடைகளும்

## 2020



தேசிய மறைக்கல்வி நடுநிலைய வெளியீடு

## 2020 மறையாசிரியர் தேர்வு
## வினாக்களும் விடைகளும்
## Iம் வினாத்தாள்

**1ம் வினா**

i. புனித நாடு, அப் பெயர் கொண்டு அழைக்கப்படுவதேன்?
- கிறிஸ்துவின் பிறப்பு, தூதுப்பணி, பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியன இங்கு இடம் பெற்றதால்.

ii. கலிலேயக் கடலும் அதனைச் சூழ உள்ள பகுதிகளும் இயேசுவின் வாழ்வோடு தொடர்புபடுத்தப் பட்டுள்ளது என்பதைக் காட்ட உதாரணங்கள் இரண்டைத் தருக?
- முதல் சீடர்கள் நால்வரையும் அழைத்தல்.
- தொழுநோயாளரைக் குணமாக்குதல்.
- புயலை அடக்குதல்
- திருத்தூதர் பன்னிருவரை நியமித்தல்.

iii. வார விழா என அழைக்கப்படும் விழா எது?
- பெந்தகோஸ்தே விழா

iv. ஆலய அர்ப்பண விழா பிற்காலத்தில் என்ன விழா என பெயரிடப்பட்டது?
- ஒளி விழா

v. இறைவாக்கினரின் முக்கிய பணி யாது?
- இறைவனின் வார்த்தையைக் காலத்திற்கு, நாட்டிற்கு ஏற்ற விதத்தில் மக்களுக்கு அறிவிப்பது

vi. நாடு கடத்தல் பற்றி எழுதப்பட்டுள்ள உவமைகள் இரண்டைப் பெயரிடுக?
- உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு
- ஆண்டவர் நல் ஆயன்
- கோல்கள் இரண்டைப் பற்றிய உவமை

vii. புதிய ஏற்பாட்டு நூல் வகைபடுத்தப்பட்டுள்ள பிரிவுகளில் இரண்டைப் பெயரிடுக?
- வரலாற்று நூல்
- திருமுகங்கள்
- இறைவாக்கு நூல் (திருவெளிப்பாடு)

viii. தூய பவுல் கொரிந்தியர் திருமுகத்தை எழுதியதற்கான காரணம் என்ன?
- கொரிந்திய குழுமத்தில் இளைஞர், வளர்ந்தோருக்கிடையே ஏற்பட்ட பிரச்சனைகளுக்குத் தீர்வு அளிப்பதற்காக

ix. புதிய உடன்படிக்கை பழைய உடன்படிக்கையில் மறைந்துள்ளது. புதிய உடன்படிக்கைபழைய உடன்படிக்கையை வெளிப்படுத்துகிறது என கூறியவர் யார்?
- தூய அகுஸ்தினார்.

x. இயேசு ஆண்டவர் பயன்படுத்திய திருவிவிலியம் எது?
- திருவிவிலியத்தின் பழைய உடண்படிக்கையில் அடங்கும் எபிரேய விவிலியம்.

xi. இன்று திருப்பலியின்போது சொல்லப்படும் விசுவாசப் பிரமாணம், எந்த ஆண்டில் எந்த பொது சங்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது?
- கி.பி. 325ல் - நிசேயா பொதுசங்கத்தில்

xii. புனித சனிக் கிழமை வழிபாட்டின் பிரிவுகளில் இரண்டைப் பெயரிடுக?
- திரு ஒளி வழிபாடு
- திருமுழுக்கு வழிபாடு
- இறைவாக்கு வழிபாடு
- நற்கருணை வழிபாடு

xiii. இறை ஊக்கத்தை சுருக்கமாக வகைப்படுத்திக் காட்டும் விதங்கள் இரண்டைப் பெயரிடுக?
- மேய்ப்பு இறை ஊக்கம்.
- வாய்மொழி இறை ஊக்கம்.
- எழுத்து மூல இறை ஊக்கம்.

xiv. இணைத்திருமுறை நூல்களில் இரண்டைப் பெயரிடுக?
- தோபித்து
- யூதித்து
- எஸ்தர்
- சாலமோனின் ஞானம்
- சீராக்கின் ஞானம்
- பாரூக்கு
- தானியேல்
- மக்கபேயர் I,II

xv. திருவிவிலியத்தின்படி பழங்காலத்திலிருந்தே இறை மக்கள் ஆண்டவருக்கு பலி ஒப்புக் கொடுத்ததற்கான காரணங்கள் இரண்டை எழுதுக?
- இறைவனைப் புகழ்வதற்காக
- ஆராதிப்பதற்காக
- பாவங்களுக்கு மன்னிப்பு பெறுவதற்காக
- தமது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காக
- பாதுகாப்பை பெற்றுக் கொள்வதற்காக

xvi. திருப்பலியிலேயே உள்ள மக்களின் மூவித புகழ்ச்சியில் இரண்டைப் பெயரிடுக?
- தூயவர் என்று பாடுதல்
- விசுவாச மறை உண்மைகளை அறிக்கையிடுதல்.
- கம்பீரமாக ஆமென் (Great Amen) கூறுதல்.

xvii. திருவருகைக் கால வாசகங்களின் மூலம் நாம் சந்திக்கும் நபர்கள் இருவரைப் பெயரிடுக?
- ஆபிரகாம்
- தாவீது
- எசாயா
- திருமுழுக்கு யோவான்
- மரியாள்

xviii. ஆரம்ப திருச்சபையின் சிறப்புப் பண்புகள் இரண்டை எழுதுக?
- கற்பித்தல்
- அப்பம் பிடுதல்
- நட்புறவு
- இறை வேண்டல்.

xix. திரித்துவ மறைபொருளை நினைவுறுத்தும் செபம் எது?
- திரித்துவ ஆராதனை செபம்.

xx.. நாம் செபிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் இரண்டை எழுதுக?
- காலையில் எழும்பும்போது
- அவசர சந்தர்ப்பங்களில்
- இரவு படுக்கைக்கு செல்லும் முன்

2. (அ) இஸ்ரயேல் மக்கள் எருசலேமில் கொண்டாடிய முக்கிய திருவிழாக்கள் மற்றும் சமய கொண்டாட்டங்களில் ஏதேனும் **ஐந்தை** எழுதுக.
- புளிப்பற்ற அப்பங்களை உண்ணும் பாஸ்கா திருவிழா
- பெந்தகோஸ்தே விழா
- கூடார விழா அல்லது அறுவடை விழா
- அர்ப்பண விழா
  - ♦ ஓய்வு நாள் ♦ பச்சாதாப நாள் ♦ தானிய விழா ♦ பாஸ்கா திரு விழா

(ஆ) புனித நாட்டில் வாழ்ந்த இஸ்ரயேல் மக்களின் வாழ்க்கை பற்றி **100 சொற்களளவில்** விளக்குக.

- இக்காலத்தில் இஸ்ராயேல் மக்களின் வாழ்வில் பெரிதாக மாற்றங்கள் ஏதும் ஏற்பட்டதாக தெரியவில்லை.
- பொதுமக்களிடமிருந்து தேவாலய வரி சேகரித்து உயர்மட்ட மக்கள், செல்வநிலையில் வாழ்ந்தார்கள்.
- விசேடமாக எருசலேமுக்கு அண்மையில் வாழ்ந்து குரு மரபினர் பொதுமக்களை வருத்தி தாங்கள் ஏற்படுத்திக் கொண்ட சட்டம், சம்பிரதாயத்திற்கேற்ப உயர்நிலை வாழ்க்கை வாழ்ந்தார்கள்.
- இடையர் வாழ்விலும் விவசாயத்திலும் மக்களின் பொருளாதாரம் தங்கியிருந்தது.
- கலிலேயாவில் பலர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டனர். (லூக் 5:1-11, மத் 4:18-22, மாற் 1:16-20)
- விவசாயம் பற்றிய மனநிலையை புதிய ஏற்பாட்டில் காணலாம். (மத் 13:1-9, 13:24-30, யோவா15:1-11)
- கலிலேயர்களைப் பலயீனர்கள், அறிவற்றவர்கள் என வெளி உலகினர் எண்ணினர். சமாரியர் தமது பிரதேசத்தில் மட்டுமே வாழ்ந்தனர். அவர்கள் முரட்டுக் குணம் படைத்த வர்கள்.
- யூதேயாவில் வாழ்ந்த பலர் கிரேக்கமொழி கற்று அறிவாளிகளாயிருந்தனர்.
- தலைக்கணம் கொண்டவர்களும் எருசலேமுக்கருகில் வாழ்ந்தனர். இவர்கள் இரட்டை வாழ்க்கை வாழ்ந்தனர்.
- மோசேயின் சட்டத்தை நுனுக்கமாகக் கடைப்பபிடிப்பதாக கூறி மக்களிடமிருந்து ஆலயவரி சேகரித்து, சுகபோக வாழ்க்கை வாழ்ந்தனர்.
- மொழிக்கேற்ப கிரேக்கமொழி கற்றோர், அரமெய்க் மொழி பேசுவோர் என சமுதாயம் பிரிக்கப்பட்டிருந்தது.

3.(அ) இறைவாக்கினர் மக்களுக்கு போதிக்கும்போது பேசிய முக்கிய தலைப்புகளில் **ஐந்தை** எழுதுக?

- சமூக நீதி
- ஒரே இறை கொள்கை
- இறைவனின் நாள்
- துன்புறும் ஊழியன்
- சட்டத்திற்கு மதிப்பளித்தல்
- மெசியா மனநிலை
- உடன்படிக்கை மனநிலை

(ஆ) பஞ்சாகமம் பற்றிய விடயங்கள் **ஐந்தை** சுருக்கமாக விளக்குக?

- திருவிவிலியத்தின் முதல் ஐந்து நூல்களும் இதில் அடங்குகிறது.
- இந் நூல்களின் பொதுவான தலைப்பு - இஸ்ரயேல் மக்கள் இறை மக்களாக நியமனம் பெறுதலாகும்/ எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றுக் கொள்ளும் நிகழ்வு.
- இந் நூல் முழுவதிலும் விசேட ஒருவராக காட்டப்படுபவர் மோசேயாவார்.
- இஸ்ரயேல் மக்களின் சட்டங்கள் சுருக்கமாக சீனாய் உடன்படிக்கையாகும்.
- இவ்வுடன்படிக்கை சிறப்பான ஒரு கேந்திர நிகழ்வு
- இறைவன் - மனிதன் தொடர்பு இதன் தொடக்க நூலில் காட்டப்படுகிறது.
- இறைவன் அனைத்தையும் படைத்தவர்.
- இஸ்ரயேல் மக்களின் விடுதலை லேவியராகமத்திலிருந்து குருக்கள் இனத்தாரின் பிறப்பு வரலாறு, எண்ணாகமத்திலிருந்து எகிப்திலிருந்து புறப்பட்ட மக்களின் எண்ணிக்கை குருக்களின் சடங்கு முறை.
- மோசே சட்டத்தின் ஆழமான மறையுண்மை காட்டப்படுகிறது.

4.(அ) இணைத்திருமுறை நூல்களை ஏற்றுக் கொள்ளாத திருச்சபைத் தந்தையர்கள் **ஐவரைப்** பெயரிடுக.

- எருசலேமின் சிரில்
- ஜோன் டமசின்
- எரோம்
- எப்பிபானியஸ்
- கிரகோரியார்.

(ஆ) மறையாசிரியர் என்ற ரீதியில் திருவிவிலியம் உமக்கு முக்கியமானதாயிருப்பதற்கான காரணங்களை **120 சொற்களளவில்** விளக்குக.

- திருவிவிலியம் இயேசுவின் வார்த்தை
- அவரைப் பற்றி அறிவதற்கு திருவிவிலியம் வாசிக்க வேண்டும்.
- இறைவனின் மேன்மையான அன்புக்கு, இயேசுவுக்கு சான்று பகர்வதற்கு திருவிவிலியம் உதவுகிறது.
- திருவிவிலியத்தில் இறைவனின் அன்பு, இயேசுவின் வார்த்தை, வாழ்கிறது.
- இறைவனுடன் இணைந்து வாழ திருவிவிலியம் பேருதவி
- வாழ்க்கையை சரியாக - முறையாக வாழ்ந்திட திருவிவிலியம் வழிக் காட்டுகிறது.

5.(அ) திருப்பலியில் இறைவார்த்தை பகுதிக்குரிய முக்கிய பகுதிகள் **ஐந்தைப்** பெயரிடுக.

- முதலாம் வாசகம்
- பதிலுரைப் பாடல்
- இரண்டாம் வாசகம்
- ஆர்ப்பரிப்பு
- நற்செய்தி
- மறையுரை
- விசுவாசிகளின் மன்றாட்டு

(ஆ) திருப்பலியில் செயற்பாட்டுடன் பங்கு கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் **ஐந்தைப்** விளக்குக?

- செபங்கள், பதிலுரை ஆகியவற்றை வாயைத் திறந்து சொல்லி பக்தியுடன் பங்கு கொள்ளுதல்.
- சரியான சைகைகள் (கரம் குவித்தல், பீடத்தை பார்த்திருத்தல், பக்தி)
- கீர்த்தனைகளைப் பாடுதல்.
- காணிக்கை பவனியில் பங்கேற்றல்.
- பக்தி, கௌரவத்துடன் நற்கருனையை பெற்றுக் கொள்ளுதல்.
- மறையுரைக்கு செவிசாய்தல்.

6.(அ) தவக் காலத்தில் அடங்கும் முக்கிய திருவழிபாட்டு நாட்கள் **ஐந்தைப்** பெயரிடுக?

- திருநீற்றுப் புதன்
- குருத்து ஞாயிறு
- பரிசுத்த தைலம் ஆசீர்வதிக்கப்படும் திருப்பலி
- பெரிய வியாழன்
- பெரிய வெள்ளி
- புனித சனி
- பாஸ்கா ஞாயிறு

(ஆ) தவக்காலத்தில் கிறிஸ்தவன் ஆற்ற வேண்டிய செயற்பாடுகள் **ஐந்தை** விளக்குக?

- கிறிஸ்து பாலைவனத்தில் செபித்தல்.
- மனமாற்றம், தியாகம், வாழ்வு
- லௌகீக ஆசைகள், சுய நலத்தில் இருந்து ஆண்டவரில் சுதந்திர பிள்ளையாக வாழுதல்.
- தானதருமம், ஒருத்தல், ஏழைகளுக்கு உதவுதல் போன்ற பக்தி முயற்சிகளில் பங்கேற்றல்.

7.(அ) செபத்தின் நோக்கங்கள் **ஐந்தை** எழுதுக?

- இறைவனின் மகிமையை சொற்களால் மட்டுமன்றி, செயலாலும் வெளிப்படுத்தல்
- எமது சகோதரர்களின் ஆன்மீக, சரீர தேவைகளின் பொருட்டு மன்றாடுதல்.
- இறைவனின் மகிமையின் பொருட்டுக் கிறிஸ்துவில் உலகை ஒன்றிணைத்தல்.
- எமது ஆன்ம, சரீர தேவைகளை இறைவனின் முன் வைத்தல்.
- இறைவனிடம் எமது ஆழமான அன்பை வெளிப்படுத்துதல்.
- இறை அன்பிற்குப் பிரதி அன்பு காட்டுதல்.

(ஆ) செபத்தின் மூலம் எமது தேவைகள் நிறைவேற்றப்படுவதில்லை என கூறும் உமது நண்பனுக்கு நீர் அளிக்கும் பதிலை **100 சொற்களளவில்** முன்வைக்குக.

- செபம் இறைவனுடனான எமது உரையாடல் எனவும் இறை சித்தத்திற்கு கீழ்படிதல் செபத்தின் நோக்கம் எனவும் கூறுதல்.
- இறை சித்தத்திற்கு கீழ்ப்படிந்த ஆபிரகாமுக்கு அவரது தேவை நிறைவேற்றப்பட்டது
- ஆன்மீக காரியங்களை நிறைவேற்றுதலால் சரீர தேவைகள் நிறைவேற்றப்படுதல்
- தாழ்மையோடு செபிக்க வேண்டும் என
- இயேசு கற்பித்த செபத்திலிருக்கும் பண்புகள் எமது செபத்தில் இருக்க வேண்டும்
- இறைவன் அனைத்தையும் நிறைவேற்றுவார் என
- எமது பாவ நிலையை ஏற்று செபிக்க வேண்டும் என
- நாம் வேண்டும் மன்றாட்டினால் எமக்கு தீங்கு ஏற்படுவதற்கு இறைவன் அனுமதிக்க மாட்டார் என
- அன்புடன் ஒன்றுபட்டு செபிக்க வேண்டும் என
- பக்தியோடு இறைவனில் ஒன்றித்து செபிக்க வேண்டும் என

8. கீழ்க்காணும் தலைப்புகளில் மூன்றைத் தெரிவு செய்து ஒவ்வொன்றுக்கும் **ஐந்து வரிகளளவில்** சிறு குறிப்பு எழுதுக?

- **புனித நாட்டின் சமய பின்னணி**

எருசலேம் ஆலயத்தில் சமயசடங்குகளை ஆரோனின் மரபிலிருந்து வந்த குருக்களே ஆற்றினர். தினமும் பலி ஒப்புக் கொடுத்தல், பலிப்பீடத்தில் நெருப்பு மூட்டுதல், விளக்கேற்றுதல், ஒப்பக்கொடுக்கும் ரொட்டி தயாரித்தல், சட்டங்களை அறிவித்தல் ஆகியன அவர்களின் பணியாக இருந்தது. ஆலயம் தூய்மையானது. மக்கள் சட்ட திட்டங்கள், சடங்குகளைப் பின்பற்றுவதற்கேற்ப தூயவர்கள், தூய்மையற்றவர்கள் என கணிக்கப்பட்டனர். பஞ்சாகமத்தின் சட்டதிட்டங்களும் முன்னோர்களின் சம்பிரதாயமும் மறைச் சட்டங்களாயிருந்தன. எருசலேம் ஆலயம், செபக் கூட மண்டபம், புனிதத் தலம் ஆகியன சமய திருத்தலமாக விளங்கின. ஓப்புக் கொடுக்கப்பட்ட பலிகள்:- எரி பலி, பங்கு கொள்ளும் பலி, பாவப் பரிகார பலி, தானியப் பலி, அப்பம் ஒப்புக் கொடுக்கும் பலி என்பனவாகும்.

- **நற்கருணை புகழ் பாடல்**

இறைமக்களுடன் ஒப்புக் கொடுக்கும் யேசுவின் செபமாகும். இது முழுமையாக குருவானவராலேயே சொல்லப்பட்டாலும் மக்களின் மூவித புகழ்ச்சி மூலம் அதாவது:- தூயவர் என்று பாடுதல். விசுவாச மறை உண்மைகளை அறிக்கையிதல். கம்பீரமாக ஆமென் கூறுதல். (Great Amen)மூலம் மக்களுக்கு இணைத்துக்கொள்ளப்படுகிறார்கள். இந்த ஆர்ப்பரிப்பை (புகழ்ச்சி) சத்தமிட்டு சொல்வதானது திருப்பலியில் செயற்பாடுடன் பங்கு கொள்ளும் பண்பாக அமைகிறது.

- **திருவழிப்பாட்டு ஆண்டு**

  கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளையும் மீட்பின் பணியையும் என்றென்றும் நினைவு கூறுவதற்காகவும் (ANAMNESIS), மக்களை அதில் வாழவைப்பதற்காகவும் உத்தியோகபூர்வ மாகஓர் ஆண்டு கால வட்டத்திற்குள் கொண்டாடுவதற்கு திருச்சபையின் காலப்பகுதி பிரித்து தயாரிக்கப்பட்டுள்ளது. அது திருவழிபாட்டு வருடம் என அழைக்கப்படுகிறது. தந்தை இறை வனை ஆராதனை செய்யவும் அவரது புகழ் பாடுவதற்கும் எம்மைத் தூய்மையாக்கி அருளடையாளங்களை வழங்குவதற்கும் திருச்சபை ஆவணசெய்கிறது.

- **செபத்திற்கான இயேசுவின் முன்மாதிரிகை**

  இயேசு தன் முன்மாதிரிகையான வாழ்வின் மூலம் செபத்தின் மேன்மையை எடுத்துக் காட்டினார். செப வாழ்விற்கு கிறிஸ்துவே சிறந்த எடுத்துக்காட்டாவார். அவர் பண்ணிரண்டு வயது முதல் தந்தையின் வேலைகளில் ஈடுப்பட்டு செப வாழ்வு வாழ்ந்தார். அவர் உபவாசத்து டனும், விடியற் காலையில் / தந்தையின் விருப்பத்திற்கமைய / இடை விடாமல் செபித்தல். அவரது முன்மாதிரிகையான வாழ்வினால் செபத்தின் முக்கியத்துவம் பற்றி தெளிவுபடுத்தினார். தந்தையின் செயற்பாடுகளில் ஈடுப்பட்டு செப வாழ்வில் நிலைத்திருத்தார்.

- **மகிமை நிறை மறை உண்மைகள்.**

  இயேசு மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார். இயேசு விண்ணகம் சென்று தந்தையாம் இறைவனின் வலப்பக்கம் அமர்ந்துள்ளார். இயேசு பரிசுத்த ஆவியாரைத் திருத்தூதர்கள் மீதும் ஆதித் திருச்சபை மீதும் பொழிந்தார்.(தி.ப2:2-4) இயேசுவின் உயிர்ப்பால் அன்னை மரியாள் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்ட பின் விண்ணகம் எடுத்துக் கொள்ளப்பட்டார். (1தெச4:14-17) அன்னை மரியாள் விண்ணின் மண்ணின் அரசியாக முடி சூட்டப்பட்டார்.

## 2020 மறையாசிரியர் தேர்வு
## வினாக்களும் விடைகளும்
## IIம் வினாத்தாள்

**1ம் வினா**

i. 2ம் வத்தி. சங்கம் ஆரம்பமாவதற்கு ஏதுவான விடயங்கள் இரண்டை எழுதுக.
   - நம்பிக்கைக்கும் நன்நடத்தைக்கும் எதிராக எழும் தவறான படிப்பினைகளை இல்லாதொழித்தல்.
   - மாறுகின்ற காலத்திற்கேற்ப ஒழுங்கு விடயங்களைத் தயாரித்தல்.
   - திருச்சபையின் நிலையை விளக்கமாக விபரித்தல்.
   - அரசுடன் கைகோர்க்கும் நோக்கத்தை நிறைவேற்ற முடியாதாயினும் இவற்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தேவையை திருப்பீடம் உணர்ந்தது.

ii. திருத்தந்தை 23ம் அருளப்பரின் தலைமைத்துவத்தின் கீழ் திருச்சபை நல் கண்ணோட்டத்தோடு பயணத்தை ஆரம்பித்தது என்பதையும் நன்மையான பணித் திட்டங்கள் ஆரம்பமாயின என்பதையும் காட்டும் அவரது சுற்றுமடல்கள் இரண்டைப் பெயரிடுக?
   - அநீதிக்கு பதில், அவனியில் அமைதி

iii. 2ம் வத்தி. பொதுச் சங்கத்தில் கலந்துரையாடப்பட்ட முக்கிய தலைப்புகளில் இரண்டைப் பெயரிடுக?
   - இறைவன்
   - மனிதன்
   - பரிசுத்த திருச்சபை
   - உலகம்

iv. இயேசு உயிர்த்த பின் தம் சீடருக்கு அளித்த இறுதி கட்டளை என்ன?
   - எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்.

v. மறையாசிரியரின் முன்மாதிரிகை எவ்வாறு இருக்க வேண்டும்? இரண்டு விடயங்களைத் தருக?

- மறையாசிரியரின் வாழ்வும் பணியும் எப்போதும் கிறிஸ்துவுடனும் தந்தை இறைவனுடனும் இணைந்திருக்க வேண்டும்.
- செப வாழ்வும் ஆர்ப்பண பணியும் மறையாசிரியரில் பிகாசிக்கும் ஆன்மீக வழியாக தாம் கற்பிப்பவற்றுக்கு சான்று பகர வேண்டும்.
- அவ்வாறே நம்பிக்கை ஒளியில் உயிர் பெறும் தமது செயல்கள் வழியாக லௌகீக நோக்கங் களை உள்ளத்திலிருந்து அகற்றி விட வேண்டும்.
- தமது வாழ்கையில் நற்செய்தியின் பெறுமதியைக் காட்டும், சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகை காட்டப்பட வேண்டும்.

vi. மறைக் கல்வி கற்பித்தல் பற்றி திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் கூறிய அறிவுரைகளில் இரண்டைத் தருக.

- மறைக்கல்வி முறையாக – விளக்கமான நோக்கத்துடன் அளிக்கப்பட வேண்டும்.
- மறையின் சாரம்சம் தவிர தேவையற்ற கேள்விகள் அதில் உள்வாங்கப்படுவது தகுதியற்றது.
- மறைக் கல்வியானது மறையை ஆராய்வதற்கல்ல. நம்பிக்கை வாழ்வை நோக்கி இட்டுச் செல்வதாகும்.
- சமய பாடங்கள் அனைத்திலும் ஒரு முழுமையான நிலை காணப்பட வேண்டும்.

vii. மறையைக் கற்பிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதென்ன?

- திருவிவிலியத்திலுள்ள செய்தி, அதற்கான பதிலளிப்பு, அதற்கேற்ப வாழுதல்.

viii. சகல கிறிஸ்தவ தலைமைத்துவத்தினதும் நோக்கம் யாது?

- உலகை தூய்மைப்படுத்தி இறையரசைக் கட்டியெழுப்புவது

ix. மீட்பின் வரலாற்றில் இறைவன் தேர்ந்தெடுத்த தலைவர்கள் இருவரைப் பெயரிடுக?

- ஆபிரகாம்
- யாக்கோபு
- ஈசாக்
- யோசேப்பு

x. நல்ல தலைமைத்துவதிற்கு அவசியமான பண்புகள் இரண்டைப் பெயரிடுக.

- ஆளுமை
- பிரசித்தி
- சுயமான ஆக்கத்திறன்

xi. மறையாசிரியராக பணியாற்ற அழைப்பு பெற்றவரின் பொறுப்புகள் இரண்டை எழுதுக.

- இறையரசைக் கட்டியெழுப்புதல்.
- கிறிஸ்துவை மற்றவரில் உருவாக்குதல்.
- பிறருக்கு கிறிஸ்துவாக மாறுதல்.
- தாம் கிறிஸ்துவை அனுபவித்து பிறரையும் அவ்வனுபவத்திற்கு உட்படுத்துதல்.

xii. பழைய ஏற்பாட்டில் இறைவன் மக்களுக்களித்த பத்து கட்டளைகளில் இரண்டை எழுதுக.

- (பத்து கட்டளைகளில் இரண்டு எழுதியிருந்தால் 2 புள்ளி)

xiii. ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு கத்தோலிக்க மறையைக் கற்பிக்கும்போது கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் இரண்டை எழுதுக.

- எளிமையான முறைகளைப் பயன்படுத்துதல்.
- பாடத்தை சரிவரக் கற்பித்தல்.
- கட்புல, செவிபுல உபகரணங்களை அதிகமாக பயன்படுத்துதல்.
- மாணவரின் ரசனைக்கேற்ப பாடத்தை தயாரித்தல்.
- விளையாட்டு, நாடகம், நடிப்பு, கதை, படங்கள் ஆகியவற்றை கற்பித்தலுக்கு பயன்படுத்துதல்.
- மாணவர்கள் வாழும் சூழலையும் மாணவர்களையும் அறிந்திருத்தல்.

xiv. 1-3 ம் தரத்தின் கத்தோலிக்க மறை பாடத்திற்கான தேர்ச்சிகள் இரண்டை எழுதுக.

- ➢ இறை தந்தையின் அன்பை படைப்பின் மூலம் உணர்ந்து கொள்வார். நன்றி செலுத்துவார், பிரதி அன்பு செலுத்துவார்.
- ➢ இறை தந்தையுடன் உரையாடுவார்.
- ➢ இறை தந்தையின் பிள்ளையாக மாற்றமடைவார்.
- ➢ இயேசுவின் விசேட பண்புகளைப் பெயரிடுவார்.
- ➢ தூயவர்களின் வாழ்வையும் திருவிவிலியத்தையும் அறிந்து கொள்வார்.

xv. ஆரம்ப வகுப்புகளுக்கான பாட நோக்கங்கள் இரண்டை எழுதுக?

- ➢ சமுதாயத்தில் கௌரவத்தோடு வாழக்கூடிய கிறிஸ்தவ பிள்ளையை உருவாக்கல்.
- ➢ கிறிஸ்தவ விழுமியங்களைக் கடைப்பிடிக்கக்கூடிய வாழ்க்கை முறையைக் கட்டியெழுப்புதல்.
- ➢ திருவிவிலியம் தேவ வார்த்தையாகும் என்பதை உணர்த்தி, திருவிவிலியத்திற்கு ஏற்றவகையில் வாழ்வதற்கு ஊக்கப்படுத்தல்.
- ➢ இறைத் தந்தையுடன் ஆன்மீக தொடர்பை ஏற்படுத்திக்கொள்வதற்கான பயிற்சியை அளித்தல்.
- ➢ தூய மரியாள் மற்றும் தூயவர்களின் நடத்தைகளின் ஊடாக முன்மாதிரியைப் பெற்றுக் கொள்ளல்.
- ➢ இறைகொடையான சுற்றாடல் பாதுகாக்கப்படும் பொருட்டுச் சிக்கனத்தைக் கடைப்பிடித்து மேலும் அபிவிருத்தி செய்வதற்கான எண்ணத்தை உருவாக்கல்.
- ➢ இயற்கை மற்றும் தன்னைச் சூழ வாழ்பவர்கள் ஊடாக இறை அன்பை அனுபவிப்பதற்கும் பிரதி அன்பை வெளிப்படுத்துவதற்குமான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- ➢ அனைவருக்கும் அன்பு செலுத்தி, குழுவில் ஒற்றுமையுடனும் சமத்துவத்துடனும் செயற்படும் ஆற்றலை மேம்படுத்துதல்.
- ➢ ஏனைய சமயங்களுக்கு மதிப்பளிப்பதுடன் ஒத்துழைப்புடன் வாழக்கூடிய உயர்ந்த குண நலனை விருத்தி செய்தல்.
- ➢ இலங்கையில் கத்தோலிக்க திருச்சபையின் பொறுப்புக்களையும் கடமைகளையும் பற்றிய அறிவைப் பெற்றுக்கொடுத்தல்.

xvi. இரண்டாம் தர பாடநூலில் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படும் தூயவர்கள் இருவரைப் பெயரிடுக?

- ➢ தூய டொமினிக் சாவியோ ➢ தூய நிக்கலொஸ்
- ➢ தூய யூதாததேயு

xvii. 4ம் தர பாடநூலில் முன்வைக்கப்படும் அருளடையாளங்கள் இரண்டைப் பெயரிடுக?

- ➢ திருமுழுக்கு ➢ ஒப்புரவு ➢ நற்கருணை

xviii. தூய ஆவியானவர் திருத்தூதரில் எழுந்தருளியதன் பின் திருச்சபை வளர்ச்சியுற்ற விதத்தைக் காட்டும் எழுத்து வடிவ சாட்சிகள் இரண்டைப் பெயரிடுக.

- ➢ திருத்தூதர் பணி நூல்
- ➢ திருமுகங்கள்
- ➢ திருத்தூதரின் படிப்பினைகள் அடங்கிய டிடாக்கே நூல்
- ➢ ஆயர் கிளமென்ட், அந்தியோக்கியாவின் இஞ்னாசியார் அடிகளார் ஆகியோரின் சில கடிதங்கள்.

xix. கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை ( குடியேற்றம்) பெருகியதனால் அதனை நிர்வகிப்பதற்காக நியமிக்கப்பட்டவர்கள் யார்?

- ➢ பெரியோர் ➢ முதல்வர்

XX. திருச்சபைக்கு எதிராக ஏற்பட்ட முதல் துன்புறுத்தலின்போது ( கலாபனை) கொல்லப்பட்ட திருச்சபையின் தலைவர்கள் யார்?

- தூய பேதுரு
- தூய பவுல்

2.(அ) பேரரசன் வலேரியன் காலத்தில் ( கி.பி. 256 – 260 ) திருச்சபைக்கு ஏற்பட்ட துன்புறுத் தல்கள் **ஐந்தை** எழுதுக.

- கிறிஸ்தவ புத்தகங்கள் எரிக்கப்பட்டன.
- ஆலயங்கள் அழிக்கப்பட்டன.
- திருச்சபையின் உடைமைகள் அரசுடைமையாக்கப்பட்டது.
- ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்கள் சிறையிலிடப்பட்டனர்.
- அவர்கள் மரண வேதனையின் மத்தியிலும் உரோமைத் தேவர்களுக்கு பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டனர்.

(ஆ) மறையாசிரியரின் மாதிரிகை கிறிஸ்து ஆவார். இதனை உறுதி படுத்தி மறை சஞ்சிகை ஒன்றிற்கு **100 சொற்களளவில்** ஆக்கம் ஒன்றை எழுதுக.

- கிறிஸ்தவ மறையின் ஆரம்ப கர்த்தா கிறிஸ்து ஆண்டவர்.
- எல்லா மறையாசிரியர்களினதும் மாதிரிகை அவரே.
- இயேசு கற்பித்ததை செயலிலும் காட்டினார்.
- இறை தந்தையுடனான உறவை வலுப்படுத்தினார்.
- அனைத்து சவால்களுக்கும் தைரியமாக முகம் கொடுத்தார்.
- துன்ப வேதனைகள் மத்தியிலும் இறை சித்தத்திற்கு கீழ்ப்படிந்தார்.
- அவர் மேலான மறையாசிரியர்.
- தனது பணியை தெளிவாக/ சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல்/ இயற்கை நிகழ்வுகள், ஆகி யவற்றை கருத்திற் கொண்டு புரிந்து கொள்ளும் விதத்தில் கற்பித்தார்.
- இயேசுவின் மனித நேயம், சட்டத்திற்கும் மேலான அன்பு.

3.(அ) நான்காம் தர பாடநூலின்படி இறையன்பிற்கு சான்று பகர்ந்தவர்கள் **ஐவரைப்** பெயரிடுக.

- இயேசுவின் சிறிய மலரான சின்னி திரேசா
- மேதகு தோமஸ் குரே ஆண்டகை
- சாமுவேல் இறைவாக்கினர்.
- தாவீது அரசர்.
- தூய டொமினிக் சாவியோ
- மோசே
- எலியா இறைவாக்கினர்.
- பேதுரு

(ஆ) நான்காம் தர மாணவர்களுக்கு திருப்பலியின் மேன்மையைப் பற்றி அறிவுறுத்துவதற்கு நீர் கூறும் வழிக்காட்டல்கள் **பத்தை** எழுதுக.

- திருவழிபாட்டின் மேன்மையான ஆராதனை திருப்பலி
- பாஸ்கா மறை பொருளை மீண்டும் நினைவுகூரல், நிறைவேற்றுதல்.
- இறைதந்தையின் மேன்மையான அன்பு திருப்பலியில் காட்டப்படுகிறது.
- திருப்பலியின் வல்லமை, வலிமையினால் கிறிஸ்தவன் புதுவாழ்வை பெறுகிறார்.
- மனிதன் மனிதனோடும், இறைவனோடும் அன்பினால் ஒன்றுபடுவது திருப்பலியிலாகும்.
- உலக ஒன்றிப்பை உறுதிப்படுத்தும் அன்பின் மேன்மையான அடையாளம்.
- சகோதரத்துவம் ஒன்றிணைவு.
- கிறிஸ்துவின் மீட்பின் மறையுண்மையை உலகில் வாழ்வாக்கல்.
- திருப்பலியில் தேவநற்கருனை முக்கியமானதாயிருக்கிறது.
- திருப்பலியில் இறைவனுக்கு புகழ்ச்சி/ ஆராதனை/ நன்றி அளிக்கப்படுகிறது.
- எமது வாழ்வை இயேசுவின் பலியோடு இனைத்து இறைதந்தைக்கு ஒப்புக்கொடுத்தல்.

4.(அ) மோசேயின் தலைமைத்துவத்திலிருந்து நீர் பெற்றுக்கொள்ளக்கூடிய மாதிரிகைகள் **ஐந்தை** எழுதுக.

- ஆண்டவரின் தளராத நம்பிக்கை
- பொறுப்பை ஏற்றல்
- இலக்கை நோக்கி பயணித்தல்.
- தனக்கு அளிக்கப்பட்ட தலைமைத்துவ அழைப்பை ஏற்றல்.
- பிரச்சனைகளுக்கு தீர்வு காணும்போது இறை துணையுடன், ஞானத்துடன் செயற்படுதல்.
- தடைகளில் மனம்தளராது தொடர்ந்து பயணித்தல்.
- எப்போதும் இறைசித்தத்தை நாடுதல்.

(ஆ) மறையாசிரியர் தனது பங்கில் ஆற்றக்கூடிய மறைத்தூது பணி செயற்பாடுகள் **ஐந்தை** விளக்குக.

- (செயற்பாடுகள் ஐந்து விளக்கத்தோடு எழுதப்பட்டிருப்பின் 10 புள்ளி)

5.(அ) திருச்சபையின் தந்தையர் என்றால் யார்? **ஐந்து** விடயங்களை தருக.

- ஐந்தாம் நூற்றாண்டு வரை மறைக்காக உழைத்தனர்.
- மறையை விளக்குவதற்காக நூல்களை எழுதினர்.
- மறையைப் போதித்தனர்.
- தூய வாழ்க்கை வாழ்ந்தவர்கள்.
- இறைவனுக்கு சான்று பகர்ந்தனர்.

(ஆ) திருச்சபை தந்தையரின் வாழ்விலிருந்து மறையாசிரியராகிய நீர் பெற்றுக் கொள்ளக்கூடிய மாதிரிகைகள் **பத்தை** எழுதுக.

- முன்மாதிரிகையான - தூய்மையான வாழ்வு
- கிறிஸ்தவ மறைக்காக அர்ப்பணிப்பு வாழ்வு
- தமது திறமைகளை பணிக்காக வழங்குதல்.
- முழுமையான அர்ப்பண/ தியாக வாழ்வு
- அறிவை பகிர்ந்து கொள்ளுதல்.
- திருச்சபையின் வளர்ச்சிகாக தன்னை அர்ப்பணித்தல்.
- சமூக பிரச்சனைகளில் கவனம் செலுத்துதல்.
- மறை நூல்களை எழுதுதல்.
- மறை பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல்.
- பொறுப்புகளை ஏற்றல்.
- நீதி, நேர்மைக்காக காரியமாற்றுதல்.

6.(அ) மறைக் கல்வியின் நோக்கத்தை விளக்குவதற்கு **ஐந்து** விடயங்களைத் தருக.

- முழுமையான மனிதத்துவத்தைக் கட்டியெழுப்புதலும் இறைவன்பால் மனிதனின் மனதைத் திருப்புவதுமாகும்.
- இறைவார்த்தையை அளிப்பதன் மூலம் உண்மையான மனஸ்தாபத்தை ஏற்படுத்துதல்.
- கிறிஸ்துவின் மறை உண்மையை நோக்கி மனிதனைக் கொண்டு செல்லுதல்.
- பாஸ்கா மறை பொருளுக்கு செயல் முறையில் சான்று பகரும் திறனை ஏற்படுத்தல்.
- இறை மக்களின் விடுதலைக்காக செயற்படும் மக்களை உருவாக்குதல்.
- லௌகீக உலகில் நற்செய்தியின் மேன்மையை உள்வாங்கி அதனைத் தூய்மைப்படுத்தல்.

(ஆ) மறைக் கல்வி கற்பிக்கும்போது அங்கே மாணவன் முக்கியமானவனாய் இருப்பது ஏன் என்பதை **100 சொற்களளவில்** விளக்குக.

- மாணவனை மையமாகக் கொண்டே மறைக்கல்வி அளிக்கப்படுகிறது.

- கற்பித்தலை சிறப்பாக செய்வதற்கு மாணவரைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும்.
- இதற்காக ஆசிரியர் மாணவரில் மனிதவதாரம் எடுக்க வேண்டும்.
- மாணவரை புரிந்து கொள்ளுதல் - அவர்களுடன் நற்புறவு கொள்ளுதல் மூலம் மாணவரை அறிந்து கொள்ளுதல்.
- ஆசிரியர் - மாணவர் உறவு அவசியம் - உரையாடல் தேவை.
- இதனால் மாணவர்களின் உடல், உள தேவைகள், வாழும் சுற்றாடல், அவர்களின் முன்னைய அறிவு, நடத்தை பற்றி அறிந்து கொள்ளல்.

7.(அ) ஆரம்ப நூற்றாண்டுகளில் கத்தோலிக்க திருச்சபை முகம் கொடுத்த சவால்கள் **ஐந்தை** எழுதுக.

- உரோமை பேரரசனின் சவால்கள் - துன்புறுத்தல்கள்.
- யூத கிறிஸ்தவர்களுக்கிடையே (அரமெய்க் மொழி, கிரேக்க மொழி) பேசியவர்களுக் கிடையே ஏற்பட்ட முரண்பாடுகள், பிரச்சனைகள்.
- யூத/புறவின கிறிஸ்தவர்களுக்கிடையே எழுந்த பிரச்சனை
- யூத மறைத் தலைவர்களின் எதிர்ப்பு
- எருசலேமில் உரோமை ஆளுநரின் எதிர்ப்பு

(ஆ) ஆரம்ப கால திருச்சபையில் துன்புறுத்தல்களுக்கு முகம் கொடுத்தபோதும் நம்பிக்கை வாழ்வை அவர்கள் காத்தார்கள். இதிலிருந்து இன்றைய கிறிஸ்தவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய மாதிரிகைகள் **ஐந்தை** விளக்குக.

- ஆழமான இறை நம்பிக்கை
- தமது மறைமட்டிலிருந்த அன்பு
- முன் மாதிரிகையான வாழ்வு
- துணிவு
- கிறிஸ்துவுக்கு சான்று
- மறை வளர்க்கும் பணி
- ஆர்வம்/ ஆன்மாவாஞ்சை
- துன்பங்களை மகிழ்ச்சியுடன் ஏற்று கொள்ளுதல்.
- மறைசாட்சி வாழ்வு

8. கீழ்க்காணும் தலைப்புகளில் மூன்றைத் தெரிவு செய்து ஒவ்வொன்றுக்கும் **ஐந்து வரிகளளவில்** சிறு குறிப்பு எழுதுக?

- **தூய பெசில்**

  கப்பதோசியாவிலுள்ள செசாரியாவில் பிறந்தார். (கி.பி330-376) அலெக்சாந்திரியாவில் எழுத்தாளர் மரபைச் சார்ந்த ஒரிஜன் என்ற மாமேதையின் சீடர்களான தூய பெசில், நாசியன்கஸ் கிரகோரியார் (330-390)நிசா கிரகோரியார் (335-394) ஆகிய மூவரும் புகழ் பெற்ற எழுத்தாளர்கள், கப்பதோக்கியாவின் தந்தையர் என அழைக்கப்பட்டனர். தூய பெசில் துறவற வாழ்வு பற்றியும், தொராலியா என்ற பெயரில் இல்லற வாழ்வு பற்றியும் எழுதிய நூல்கள் பிரசித்தி பெற்றவை. திருவிவிலிய விளக்கவுரை போதனைகள், துறவற வாழ்வு பற்றிய போதனைகள் இவரால் எழுதப்பட்டன. துறவற வாழ்வுக்கான சட்ட திட்டங்களைத் தயாரித்ததோடு துறவிகள் மடம் ஒன்றையும் நிறுவினர்.

- **திருச்சபை முகம் கொடுத்த முதலாவது துன்புறுத்தல்.**

  நீரோ பேரரசனின் கீழ் கி.பி 64-68ல் ஏற்பட்டது. அவன் உரோமைக்குத் தீ மூட்டி விட்டு பழியை கிறீஸ்தவர்கள் மீது சுமத்தினான். இதனால் மக்கள் கிறிஸ்தவர்களை எதிர்த்தார்கள். கிறிஸ்தவர்கள் பலர் விளையாட்டு மைதானத்தில் மிருகங்களுக்கு இரையாகினர். சிலர் டயிபர் நதியில் மூழ்கடித்துக் கொல்லப்பட்டனர். சிலரது உடல்களில் கெந்தகம் பூசப்பட்டு இரவில் எரியும் வர்த்திகளாகப் பாவிக்கப்பட்டார்கள். இக் கலாபனைக் காலத்திலேதான் பேதுரு அடிகளார் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார். பவுலடியார் சிரச்சேதம்

செய்யப்பட்டார். இக் கலாபனை உரோமையில் மட்டுமே நடைபெற்றது. இது கி.பி 68ல் நீரோவின் தற்கொலையுடன் முடிவுற்றது. கி.பி 69-70ல் வெஸ்பேசன் பேரரசன் காலத்தில் துன்புறுத்தல் இருக்கவில்லை. அவரது காலத்தில் அவரது மகன் டய்டஸ் எருசலேமுக்குத் தீ வைத்து ஆலயத்தைக் கொள்ளையிட்டு அழித்தான்.

➢ **2ம் தர கத்தோலிக்க மறைநூல்**

2ம் தர பாட நூலிலுள்ள விடயங்களை விளக்குவதற்காக அது 5 ஆய்வுப் பொருட்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை

- ♦ இறை தந்தையின் அன்பை அனுபவித்தலும் நன்றி கூறுதலும்
- ♦ இறை தந்தையை அன்பு செய்தல்.
- ♦ இறை தந்தையுடன் உரையாடுவதற்கு பழகுதல்.
- ♦ இயேசுவின் மேன்மையான பண்புகளை அறிந்து கொள்ளுதல்.
- ♦ திருவிவிலியம் இறைவார்த்தை என்பதை ஏற்றுக் கொள்ளுதல் ஆகும். அத்தோடு இப்பாட நூலில் பல பொது விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

➢ **மறை பாடத்திற்காக கட்புல, செவிபுல உபகரணங்களை பயன்படுத்தல்.**

கண்களால் காணக் கூடியதை மாணவர்களுக்குக் காட்டியும் காதுகளால் கேட்க கூடிய ஒலி - ஒளி நாடாக்களை செயற்படுத்தியும் கற்பிப்பதற்கு இந்த கட்புல, செவிபுல உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தும்போது மாணவர்களின் வயது, தரம், புரிந்து கொள்ளும் நிலை ஆகியவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டும். சுவரொட்டி, வர்ணங்களாகவும் எழுத்துக்கள் தெளிவாக நேர்த்தியாகவும் அனைவருக்கும் தெரியக் கூடியதாகவும் இருத்தல் அவசியம். அவ்வாறாயின் கற்று அறிவதை விட இந்த பார்த்தல், கேட்டல் மூலம் விடயம் மாணவர் மனதில் எளிதில் பதியக் கூடியதாய் அமைகிறது.

➢ **2ம் வத்தி. சங்கம் வெளியிட்ட கொள்கை விளக்கம்.**

இரண்டாம் வத்தி. சங்க போதனை 16 ஏடுகளாக வெளிவந்தன. அவற்றை மூன்று வகையாக பிரிக்கலாம். அவை:-

- ♦ கொள்கை விளக்கம் (4)
- ♦ அறிக்கை (3)
- ♦ விதித் தொகுப்பு (9) ஆகும்.

கொள்கை விளக்கம் நான்கும்,

1. திருவழிப்பாடு பற்றிய கொள்கை விளக்கம்.
2. திருச்சபை பற்றிய கோட்பாடு விளக்கம்
3. இறை வெளிப்பாடு பற்றிய கோட்பாடு விளக்கம்.
4. இன்றைய உலகில் திருச்சபை பற்றிய கொள்கை விளக்கம் ஆகும்.

**வெளியீடு**

தேசிய மறைக்கல்வி, திருவிவிலியப்பணி நடுநிலையம்,
முதலாம் மாடி,
இல. 19, பல்கம் இடம்,
கொட்டா வீதி, கொழும்பு - 08.

தொலைபேசி: 011-2685459
தொலை நகல்: 011-2665021
மின் அஞ்சல்: natcatbibile@gmail.com